


35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நிதி: 35 பாலம்: 23 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 01, 2025

# தென் ஆபிரிக்காவில் G20 உச்சிமாநாடு

2025ஆம் ஆண்டிற்கான G20 நாடுகளின் இருபதாவது உச்சிமாநாடு தென்னாபிரிக்காவில் உள்ள ஜோகன்னஸ்பர்க் நகரில் (Johannesburg) இருக்கும் எக்ஸ்போ மையத்தில் (Expo Centre) 2025 நொவெம்பர் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் நடைபெற்றது.

ஆஜென்டினா, அவுஸ்ரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, சவூதி அரேபியா, தென்னாபிரிக்கா, தென்கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய 20 நாடுகளும் G20இல் இருக்கின்றன.

2023இல் நடைபெற்ற G20 நாடுகளின் பதினெட்டாவது உச்சிமாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆபிரிக்க ஒன்றியத்தை G20இல் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவித்தார். இதனால் இப்போது G20இல் 21 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த இருபதாவது உச்சிமாநாட்டிற்கு நெதர்லாந்து, ஸ்பெயின், ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி மற்றும் ஆசியான் (ASEAN) ஆகியன பார்வையாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆபிரிக்காக் கண்டத்தில் நடைபெறும் G20 நாடுகளின் முதலாவது உச்சிமாநாடாக இது இருந்தது. இம்மாநாட்டில் சீனாவின் அதிபர் XI Jinping, ரஷ்யா வின் அதிபர் விளாடிமிர் புடின் மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உள்ளிட்ட பல முக்கிய பொருளாதார வளங்களையுடைய நாடுகளின் தலைவர் கலந்துகொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

காலநிலை மாற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தப்படுதல், வளர்முக நாடுகளுக்கு அதிக ஆதரவு காட்டுதல், உலகளாவிய கடன் நிவாரணத்தை வலியுறுத்துதல் போன்ற தென்னாபிரிக்காவின் G20 உச்சிமாநாட்டு நிகழ்ச்சி நிரல் அமெரிக்காவின் கொள்கைகளுக்கு ஒத்துப் போகாததால் அமெரிக்கா இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள மாட்டாது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

தென்னாபிரிக்கா தனது நாட்டில் உள்ள வெள்ளையின ஆபிரிக்க சிறுபான்மை இனத்தவருக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதாகவும், வெள்ளையின விவசாயிகள் மீது வன்முறைத் தாக்குதல் மற்றும்



G20 leaders summit family photo

Thanks: Wikipedia

அவர்களின் நில அபகரிப்புகள் அங்கு நடைபெறுவதாலும் அமெரிக்கா இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளாமல் புறக்கணிக்கிறது என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்ததாக WION ஊடகம் தெரிவித்துள்ளது.

G20 நாடுகளின் இருபத்தோராவது உச்சி மாநாடு 2026ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நடைபெற உள்ளது. G20 நாடுகளின் இருபதாவது உச்சி மாநாட்டின் இறுதிநாளான நொவெம்பர் 23ஆம் திகதி வழமையான உச்சி மாநாட்டின் இறுதியில் நடைபெறும் G20 நாடுகளின் உச்சி மாநாட்டின் தலைமைப் பதவியை சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்வு இம்முறை நடைபெறவில்லை.

இந்த நிகழ்வு நொவெம்பர் மாத இறுதியில் அமெரிக்க அதிகாரிகளுடன் நடைபெறும் என BBC ஊடகம் தெரிவித்துள்ளது. அத்துடன் G20 நாடுகளின் இருபத்தோராவது மாநாடு அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் உள்ள அமெரிக்க அதிபருக்கு சொந்தமான கோல்ஃப் (Golf) மைதானத்தில் நடைபெறும் எனவும் BBC ஊடகம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டிற்கான G20 நாடுகளின் இருபதாவது உச்சி மாநாட்டின் கருப்பொருளாக "ஒற்றுமை (Solidarity), சமத்துவம் (Equality), நிலைத்தன்மை (Sustainability)" இருக்கும் என இந்த இருபதாவது உச்சிமாநாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாடான தென்னாபிரிக்கா அறிவித்திருந்தது.

தென்னாபிரிக்கா விடுத்துள்ள செய்தியில், ஒற்றுமை என்பது பல்வேறு பொருளாதாரங்களுக்கிடையேயான ஒத்துழைப்பைக் குறிக்கும். சமத்துவம் என்பது பல்வேறு நாடுகளுக்கு இடையேயும், நாடுகளுக்குள்ளும் நியாயமான வாய்ப்புகளை ஊக்குவிப்பதைக் குறிக்கும். நிலைத்தன்மை என்பது எமது எதிர்கால சந்ததியினருக்கு தீமை செய்யாத நீண்டகால வளர்ச்சியைக் குறிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் தென்னாபிரிக்கா விடுத்திருந்த அறிக்கையில், இம்முறை நடைபெற இருக்கும் உச்சி மாநாட்டில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டிருந்தது. அவற்றில் சில பின்வருமாறு:

**பேரிடர் மீள்தன்மை (Disaster Resilience)**
காலநிலை தொடர்பான மற்றும் இயற்கைப் பேரழிவுகளின் மீட்புப் பணிக்கு சர்வதேச ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்.

**கடன் நிலைத்தன்மை (Debt Sustainability):**
குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கான கடன் நிவாரண முறைகளை கண்டறிதலும் அவற்றை ஊக்குவித்தலும்.

**எரிசக்திமாற்ற நிதி (Energy Transition Finance):**
மீளவும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உள்ள (Renewable) எரிசக்தியை உருவாக்குவதற்காக நிதி திரட்டுதல்.

**முக்கியமான கனிமங்கள் (Critical Minerals):**
கனிம வளங்கள் உள்ள பிரதேசங்களிற்கு நன்மை பயக்கும் வண்ணம் ஒரு நிலையான வளர்ச்சியை ஊக்குவித்தல்.

இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட உலக வர்த்தக அமைப்பின் (World Trade Organisation) இயக்குநர் நாயகமான கலாநிதி நகோசி ஒகொன்ஜோ-இவேலா (Director-General Dr. Ngozi Okonjo-Iweala)இனுடைய கூற்றுப்படி, உலகளாவிய வர்த்தகத்தில் தற்போது பலசிக்கல்கள் ஏற்பட்ட போதும் இப்போது நடைபெறும் உலக வர்த்தகத்தில் 72% ஆனவை இன்னும் உலக வர்த்தக அமைப்பின் விதிகளுக்கு உட்பட்டே நடைபெறுகின்றன. இது உலகளாவிய வர்த்தகத்தில் நிலையான தன்மை (Stability), எதிர்வு கூறும்தன்மை (Predictability) மற்றும் நிச்சயத்தன்மை (Certainty) இருப்பதை உறுதி செய்கிறது என்றார்.

அவர் மேலும் கூறுகையில், வர்த்தகத்தில் தற்போதுள்ள நெருக்கடி நிலை உலகளாவிய வர்த்தக அமைப்பை சீர்திருத்த ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்குகிறது. இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உலகளாவிய வர்த்தக அமைப்பை உண்மையிலேயே நாம் சீர்திருத்த விரும்பினால் முதலில் எம்மை நாமே எது வேலை செய்கிறது? எது வேலை செய்யாது? அவற்றை எப்படி தீர்ப்பது?

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









# Canada House by CONCORD

## Toronto

Special Deal



- Heart of the Downtown Toronto
- 2 Spectacular Buildings with shared Amenities
- Special 2 year mortgage only 0.1%
- Very Flexible deposit structure
- Price starting as low as $500,000
- Parking & Locker available for Purchase
- Maintenance Fee 0.77$ per Sq.Ft.

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

**5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2**

**Tel: 416-321-6969** * Independently owned and operated.

# ATTENTION REALTORS & HOME BUYERS



Available Till Midnight Including Weekends & Holidays

**ANTON DHARMASEELAN**
MORTGAGE BROKER
#2 Mortgage Alliance Agent in All of Canada & #1 in GTA

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| Purchase | Major Banks |
| Refinance | Alternative Lenders |
| Self Employed | B Lenders |
| Bad Credit | Credit Unions |
| Investment Property | Trust Companies |
| Renewal | Private Lenders |

**416 704 1200**

anton@myhomemls.ca
Corporate:: #1410-5140 Yonge Street

Broker #10530

MORTGAGE ALLIANCE

Vlambaram - December 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-30 5:57 PM Page 4



# அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பது எப்படி?



T. சிவபாலு

வாழ்க்கைப் படகை ஓட்டிச்செல்வது என்பது சவால்கள் நிறைந்தது. வருமானம் செலவு என்பதற்கிடையேயுள்ள சமத்துவத்தைப் பேணி வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு குடும்பத் தலைவனுக்கும் தலைவிக்கும் முன்னுள்ள விடயமாகும். நாளாந்தச் செலவு, மாதாந்தச் செலவு, வருடாந்தச் செலவு, எதிர்பாராத செலவுகள் என்பனவற்றை நாம் கருத்தில் கொண்டு செயற்படுவது அவசியமாகின்றது.

நாளாந்தச் செலவு என்பது நாம் அன்றாடம் உண்ணும் உணவு மற்றும் போக்குவரத்துச் செலவுகளை உள்ளடக்குவதாக அமைகின்றது. மாறாக மாதாந்தச் செலவு என்பது பட்ட கடனை அடைப்பது அதாவது வீட்டு வாடகை, வீட்டு அடமானம் போன்ற வங்கிக் கடன்களுக்காகச் செலுத்த வேண்டியவை. நாம் பாவிக்கும் மின்வலு, நீர், சமையல் எரிவாயு, காப்புறுதி நிதி போன்றவையும் உள்ளடங்குகின்றது.

இவற்றைவிட வாகனத் திருத்தம், உராய்வு நீக்கி மாற்றம், வாகன ரயர் மாற்றம், உறவினர் நண்பர்களின் திருமணம், பூப்புனித நீராட்டு, பிறந்த நாள் கொண்டாட்டங்கள் என்பன வருடாந்தம் செலவு செய்யப்பட வேண்டியவை என்பனவற்றுள் அடக்கமுடியும்.

இவை அனைத்தும் எமது வருமானத்தைக் கொண்டு செலவிடப்படவேண்டியவை. கடன்பட்டுச் செலவிடுவது பல்வேறு இடர்பாடுகளைக் கொண்டு வருகின்றது. இவற்றைச் சமாளிப்பதற்கு கணவன், மனைவி இருவரும் இணைந்து வரவு செலவைத் திட்டமிட்டு செயற்படுவது 'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற நிலைக்குக் கவலைக் கடலில் ஆழ்த்திவிடும். குடும்பம் என்பது மகிழ்ச்சி நிலவும் ஒரு பல்கலைக்கழகம் என்கின்றனர்.




எதிர்பாராதவிதமாக நாட்டுச் சூழ்நிலைகளால் எமது குடும்பச் செலவினம் அதிகரித்ததால் அதனைச் சமாளித்துக் கொள்ளுவது தவிர்க்கமுடியாததாகின்றது. எமது வருமானம் மாறவில்லை நாட்டில் விலையேற்றத்தால் எமது அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துவிட்டமையால் எமது நாளாந்தச் செலவினம் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. நாளாந்தம் நாம் உண்ணும் உணவின் அளவைக் குறைக்க முடியாது. 'ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய், இரு நாளுக்கேல் என்றால் ஏலாய் இடும்பை கூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது"

வரவு செலவுத்திட்டம் என்பது உங்கள் பணத்தை நிர்வகிக்க உதவும் ஒரு திட்டம். நீங்கள் எவ்வளவு பணம் பெறுகிறீர்கள், செலவிடுகிறீர்கள், சேமிக்கிறீர்கள் என்பதைக் கண்டறிய இது உதவுகிறது. வரவு-செலவை உருவாக்குவது உங்கள் வருமானத்தை உங்கள் சேமிப்பு மற்றும் செலவுகளுடன் சமநிலைப்படுத்த உதவும். உங்கள் நிதி இலக்குகளை அடைய இது உங்கள் செலவினங்களை வழிநடத்துகிறது.

* வரவு-செலவுத்திட்டம் செய்வதற்கு முன் என்ன கருத்தில் கொள்ள வேண்டும்.
* உங்கள் வரவு-செலவுத்திட்டத்தை உருவாக்குவதற்கு முன் இந்த எளிய வழிமுறைகளை எடுங்கள்.
* உங்கள் நிதி இலக்குகளைப் பற்றி சிந்தியுங்கள்
* உங்கள் குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளை அடையாளம் காணவும். அந்த இலக்குகளுக்கான சேமிப்பை உங்கள் பட்ஜெட்டின் ஒரு பகுதியாக ஆக்குங்கள்.

எடுத்துக்காட்டாக, இலக்குகள் பின்வருமாறு:

### 1. குறுகிய கால இலக்குகள்:

* உங்கள் கடன் அட்டைகளில் உள்ள கடன் தொகையை அடைத்தல்
* உங்கள் வாராந்திர செலவுகளைக் குறைத்தல்.
* அவசர நிதியை உருவாக்கத் தொடங்குதல். எமக்கு ஏதாவது இடர் வரும்போது அதனைச் சமாளிப்பதற்கான நிதியைச் சேமித்து வைத்துக்கொள்ளுதல்.

### 2. நீண்ட கால இலக்குகள்:

* உங்கள் அனைத்து கடன்களையும் அடைத்தல்: பெருந்தொகையான வட்டியையும், கட்டாமல் தாமதிப்பதற்கான தண்டப் பணத்தையும் குறைப்பது மட்டுமன்றி இல்லாதொழித்தல்.
* வீடு அல்லது கார் வாங்க சேமிப்பு
* குழந்தைகளைப் பெற, பள்ளிக்குச் செல்ல அல்லது ஓய்வு பெற சேமிப்பு
* எதிர்பாராத சூழ்நிலைகளைச் சமாளிக்க அவசர நிதியை உருவாக்குங்கள். உங்கள் அவசர நிதி 3 முதல் 6 மாதங்களுக்கு உங்கள் வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்டப் போதுமான பணத்தை உங்களுக்கு வழங்க வேண்டும். இந்தத் தொகைகள் சில நேரங்களில் கைக்கு எட்டாததாகத் தோன்றலாம். அதனால்தான் நீங்கள் தொடர்ந்து ஒரு சிறிய தொகையைச் சேமிப்பதன் மூலம் தொடங்க வேண்டும்.
* அவசர நிதியை வைத்திருப்பது நிதி அழுத்தத்தைக் குறைக்கவும் கடன் சுழற்சியில் சிக்கிக்கொள்வதைத் தவிர்க்கவும் உதவும்.

### அவசர நிதியை எவ்வாறு சேமித்து வைத்திருக்கலாம்?

உங்கள் பணம் எங்கே போகிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உங்கள் பணத்தைக் கண்காணிப்பது உங்கள் வருமானத்தைப் பொறுத்ததாக உள்ளது. எப்படி பணம் செலவாகின்றது என்பதைக் கண்டறிய நீங்கள் நாளாந்தம் செலவிடும் பணத்தைப் பதிந்து வைப்பதால் அறிந்துகொள்ள முடியும்.

நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு டொலரும் உங்கள் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்டத்தைப் பாதிக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள வைக்கின்றது.

உதாரணமாக, நீங்கள் ஒரு நாளைக்கு $3 கோப்பிக்கு செலவிட்டால், அது வருடத்திற்கு $1,000இற்கும் அதிகமாக செலவாகும்.

உங்கள் பணம் எங்கு செல்கிறது என்பதைக் கண்காணிக்க, நீங்கள் என்ன செலவிடுகிறீர்கள் என்பதைக் கவனியுங்கள்.

### 1 அல்லது 2 மாதங்களுக்கு இந்தப் பயிற்சியை முயற்சிக்கவும்:

மளிகைப் பொருட்கள் முதல் தினசரி ஒரு கப் கோப்பிவரை நீங்கள் வாங்கும் அனைத்தையும் பதிந்து வையுங்கள்.

இக்காலகட்டத்தில் நீங்கள் செலுத்தும் பில்களைக் கண்காணிக்கவும், எடுத்துக்காட்டாக உங்கள் தொலைபேசி அல்லது இணைய பில்.

உங்கள் செலவுகளை 2 வகையாகப் பிரிக்க முயற்சிக்கவும்: 'தேவைகள்' மற்றும் 'விருப்பங்கள்'.

செலவுப் பழக்கங்களில் சிறிய மாற்றங்கள் உங்கள் வரவு செலவுத்திட்டத்திலும் சேமிக்கும் திறனிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பொருட்களை வாங்குவதற்கு முன் பணத்தைச் சேமிப்பதற்கான வழிகளைக் கண்டறியவேண்டிய கட்டாயத்திற்கு நீங்கள் உட்படுவீர்கள்.

### உங்கள் தேவைகளையும் விருப்பங்களையும் மதிப்பிடுங்கள்

உங்கள் தேவைகளுக்கும் உங்கள் விருப்பங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்துகொள்வது ஒரு புத்திசாலித்தனமான வரவு-செலவுத்திட்டத்தை உருவாக்குவதற்கு முக்கியமாகும்.

'தேவை' என்பது அவசியமானது, அல்லது முக்கியமானது. தவிர்க்கப்பட முடியாதது. எடுத்துக்காட்டாக, உங்கள் தலைக்கு மேல் உடை, உணவு, உறையுள் அல்லது மருந்து.

'விருப்பம்' என்பது நீங்கள் விரும்பும், ஆனால் அவசியமில்லை. உதாரணமாக, ஓர் உணவகத்தில் உணவு, ஒரு பயணம், ஜிம் உறுப்பினர் அல்லது நவீனவகை உடைகள். சப்பாத்து போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தேவைகளும் விருப்பங்களும் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது. ஒருவரின் 'விருப்பம்' மற்றொருவரின் 'தேவை' யாக இருக்கலாம். உதாரணமாக, நீங்கள் ஒரு பேருந்து வழித்தடத்திற்கு அருகில் வாழ்கிறீர்கள் என்றால், ஒரு கார் ஒரு தேவை இல்லாத ஒன்றாக இருக்கலாம். இருப்பினும், உங்களிடம் பொதுப் போக்குவரத்து வசதி இல்லை என்றால், வேறுவிதமாக நகர முடியாவிட்டால், உங்களுக்கு ஒரு கார் தேவைப்படலாம். அது உங்கள் வருமானத்தின் முதலீடாகவும் இருக்கலாம்.

உங்கள் தேவைகளும் விருப்பங்களும் காலப்போக்கில் மாறக்கூடும். உதாரணமாக, நீங்கள் ஒரு குடும்பத்தை வளர்க்கும்போது ஒரு பெரிய வீடு ஒரு தேவையாக இருக்கலாம். இருப்பினும், உங்கள் குழந்தைகள் உங்களைவிட்டு வெளியே சென்று தனித்து வாழும்போது ஒரு சிறிய வீடு உங்களுக்குப் போதுமானதாக இருக்கலாம். உங்கள் தேவைகளையும் விருப்பங்களையும் நீங்கள் கண்டறிந்ததும், உங்கள் வரவு செலவுத்திட்டம் உருவாக்க நீங்கள் தயாராக உள்ளீர்கள்.

### வரவு-செலவுத் திட்டத்தை எவ்வாறு உருவாக்குவது

பயனுள்ள வரவு செலவுத்திட்டம் உருவாக்க, பயன்படுத்த எளிதான ஒரு பயனுள்ள கருவி உங்களுக்குத் தேவை.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

Vlambaram - December 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-30 5:57 PM Page 5



# தென் ஆபிரிக்காவில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

போன்ற கேள்விகளைக் கேட்க வேண்டும்.

இந்த உச்சி மாநாட்டில் அமெரிக்கா கலந்துகொள்ளாவிட்டாலும், தென் ஆபிரிக்கா இந்த உச்சிமாநாட்டைச் சிறப்பாக நிர்வகித்து நடத்தி வருகிறது. அமெரிக்கா தொடர்ந்தும் G20 மற்றும் WTOஇல் உறுப்பினராகவே இருக்கிறது.



WTO Director-General Dr Okonjo-Iweala of Nigeria Thanks: WTO

வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் G20 நாடுகளின் தலைவர்கள் பலதரப்பு வர்த்தக முறைக்கு (Multilateral Trade) மிகுந்த ஆதரவு அளிப்பதாகத் தெளிவு படுத்தியிருக்கின்றனர். அவர்கள் எல்லோருமே உலகளாவிய வர்த்தக அமைப்பில் சீர்திருத்தத்தை விரும்புகிறார்கள். இதுவே WTOஇற்கு இந்த உச்சிமாநாடு தரும் முக்கிய செய்தியாகும் என்றார். கலாநிதி நகோசி ஒகொன்ஜோ-இவேலா WTO இனுடைய ஏழாவதும் முதலாவது பெண் இயக்குநர் நாயகமும் ஆவார். இவரே முதலாவது ஆபிரிக்க இன இயக்குநர் நாயகமும் ஆவார்.

இங்கிலாந்திற்கும் தென்னாபிரிக்காவிற்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல், வேலை உருவாக்கத்தைத் தூண்டுதல் மற்றும் தனியார் மூலதனத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்ட தொடர்ச்சியான பல முயற்சிகளை இங்கிலாந்தின் பிரதமர் சேர் கெய்ர் ஸ்டாமர் G20 நாடுகளின் உச்சி மாநாட்டின்போது தென்னாபிரிக்காவில் அறிமுகப்படுத்தினார்.




சமத்துவமின்மையை குறைப்பதற்கும், அதன் பொருளாதார வளர்ச்சி இலட்சியங்களை அடைவதற்கும் தென்னாபிரிக்காவின் முயற்சிகளை ஆதரிப்பதில் இங்கிலாந்து உறுதியாக இருப்பதாக கெய்ர் ஸ்டாமர் கூறினார். அவர் மேலும் கூறுகையில், ஆங்கிலோ அமெரிக்கன் (Anglo American PLC) நிறுவனத்துடன் இணைந்து இங்கிலாந்து அரசு தென்னாபிரிக்காவில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை ஆதரிப்பதற்காக 100 மில்லியன் rands (Cad $8 மில்லியன்) ஐ முதலிடுகிறது. இதில் அரைவாசித்



Mark Carney arrives in Johannesburg, South Africa
Thanks: The Canadian Press/Sean Kilpatrick

தொகை தனியார் முதலீடாகும். இதன் மூலம் தென்னாபிரிக்காவில் 4,800இற்கும் மேற்பட்ட வேலைகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார். ஆங்கிலோ அமெரிக்கன் நிறுவனம் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பன்னாட்டு சுரங்க நிறுவனமாகும் (Mining Company).

தென்னாபிரிக்கா தொடருந்து அமைப்பின் சீர்திருத்தத்திற்காக இங்கிலாந்தின் நிபுணத்துவத்தை வழங்கவும், தனியார் முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான வாய்ப்புகளைத் திறக்கவும் Crossrail சர்வதேச நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தத்தை கெய்ர் ஸ்டாமர் அறிவித்தார்.

அப்போது அவர், “உள்நாட்டிலேயே வேலை வாய்ப்புகளை வழங்க சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவது வளர்ச்சிக்கான ஒரு வழிப்பயணமாகும். நாம் ஒன்றாக வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும். வாழ்க்கைச் செலவைக் குறைக்க மிகவும் திறமையான வேலைகளை உருவாக்க முடியும்” என்று கூறினார்.

தற்போது இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவிற்கு இடையேயான வர்த்தம் 250 மில்லியன் rands (Cad $20 மில்லியன்) ஆக இருக்கிறது. இவ்வர்த்தகத்தை மேலும் அதிகரிக்க இங்கிலாந்தும், தென்னாபிரிக்காவும் ஓர் வர்த்தக உடன்படிக்கையைச் செய்தன. இதன்மூலம் தற்போது இருந்த சிவப்பு நாடா வெட்டப்பட்டு, செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. இதனால், இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தகம் எளிமையாக்கப்பட்டுள்ளது.



Mark Carney during the G20 in Johannesburg
Thanks: The Canadian Press/Sean Kilpatrick

காலநிலை நெருக்கடி (Climate Crisis) மற்றும் உலகளாவிய சவால்கள் குறித்து ஒரு பிரகடனத்தை G20 நாடுகளின் தலைவர்கள் உச்சிமாநாட்டின் ஆரம்பத்தின்போதே ஏற்றுக் கொண்டனர்.
உச்சி மாநாடு ஆரம்பிக்க முதல் பல வாரங்களாக கடுமையான பேச்சு வார்த்தைகளை நடத்தி தென்னாபிரிக்கா ஒருமித்த கருத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றது.




Mark Carney during the opening session at the G20
Thanks: The Canadian Press/Sean Kilpatrick

“இன்று G20 உச்சிமாநாட்டில் தலைவர்களின் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம். இதில் ஒரு சிறந்த சமமான மற்றும் நிலையான உலகத்தை உருவாக்க நாங்கள் ஒப்புக்கொண்ட தொலைநோக்கு நடவடிக்கைகளை நாங்கள் கோடிட்டுக் காட்டுகிறோம்” என்று நொவெம்பர் 22இல் நடைபெற்ற இரவு விருந்தின்போது தென்னாபிரிக்கா அதிபர் சிரில் ராமபோசா (Cyril Ramaphosa) கூறினார்.

G20 பிரகடனம் முக்கியப் பொருளாதாரங்களின் உலகளாவிய சமத்துவமின்மையை சமாளிப்பதற்கும், வளரும் நாடுகளின் மீதான கடன் அழுத்தங்களைக் குறைக்க சர்வதேச நிதி அமைப்புகளை சீர்திருத்துவதற்கும், ஆபிரிக்கா உட்பட பரந்த




Mark Carney at the G20 summit in Johannesburg, South Africa
Thanks: Sean Kilpatrick/The Canadian Press

உலகளாவிய தென்பகுதியில் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் உறுதி அளிக்கிறது.

இது காலநிலை மாற்றம் தொடர்பாக நடவடிக்கை, மீளவும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உலகளாவிய அமைதி, நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியை

G20 SOUTH AFRICA 2025

முன்னேற்றப் பலதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதையும் வலியுறுத்துகிறது.
G20 உச்சி மாநாட்டின் முடிவில் இறுதி ஒப்பந்தத்தில் பங்களித்த அனைத்து பங்கேற்பு நாடுகளுக்கும் தென்னாபிரிக்காவின் அதிபர் சிரில் ராமபோசா நன்றி தெரிவித்தார்.




Mark Carney with French President Emmanuel Macron
Thanks: The Canadian Press/Sean Kilpatrick

G20 உச்சி மாநாட்டின்போது கனடியப் பிரதமர் மார்க் காணி பல நாடுகளின் தலைவர்களுடன் தனித்தனியாக உரையாடினார். இதன்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உடனான உரையாடலில் ஒரு விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை




Mark Carney meeting with Indian Prime Minister Narendra Modi Thanks: The Canadian Press/Sean Kilpatrick

இரு நாடுகளுக்குமிடையே தொடங்க இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். இதன் மூலம் 2030ஆம் ஆண்டுக்குள் இரு நாடுகளுக்குமிடையேயான இருவழி வர்த்தகத்தை இரட்டிப்பாக்கி அவற்றை $70 பில்லியனுக்கு உயர்த்த முடியும் என்று இரு தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.



**ஒரு மனிதனை மதிக்கத் தெரியாதவன், நேசிக்கத் தெரியாதவன் எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தாலும் சரி, பணத்தில் மிதந்தாலும் சரி, எவ்வளவு பெரிய அதிகாரத்தில் இருந்தாலும் சரி குப்பைக்குச் சமம்**

நேசிக்கின்ற மனிதனை நேசி
மதிக்கின்ற மனிதனை மதி

**இயற்கையையும் உயிர்களையும் நேசிப்போம்.**

Vlambaram - December 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-30 5:57 PM Page 6



# பெரும்பேற்றைத்தரும் பெருந்தன்மை எங்கே?



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

மனித மனங்களில் குடிகொள்ளும் குணநலன்களில் உயர்வான நற்குணம் இதுவாகும். நமது உள்ளங்களிலும் எண்ணங்களிலும் மற்றவர்கள் குறித்து நல் உணர்வுடனும் நல்ல மனநிலையிலும் இருக்கும் தன்மை பெருந்தன்மையாகும். பெருந்தன்மையை அனைத்து வடிவங்களிலும் காண முடியும். பெருந்தன்மை என்பது தாராள இதயத்தைக் குறிக்கும். தன்னலமற்ற உதவியை மற்றவருக்கு வழங்குதல், கஞ்சத்தனம் இல்லாமையையும் குறிக்கும். பெருந்தன்மை (Generosity) என்பது கருணையின் குரல், இது ஆழமான மனித அறநெறி. இது சிறுமைக் குணமான அகந்தையோடு கூடியதல்ல. பெருமைக் குணம் படைத்தது. வாழ்க்கையில் விட்டுக் கொடுத்துப் போவதென்பது ஒரு சிறந்த பண்பு மட்டுமல்ல, பெருந்தன்மையுடையது. பொறுமைக்கே ஓர் இருப்பிடமானவர் பெருந்தன்மை வாய்ந்தவர். இன்றைய தனித்துவ உலகில் பெருந்தன்மை என்பது நாம் எப்போதாவது சிந்திக்கும் வார்த்தையாகும். இது பலருக்கும் உதவுவது, அறியாமல் செய்யும் பிழை பொறுப்பது, சிலவற்றை தெரிந்தும் தெரியாததுபோல் நடிப்பது, கண்டும்காணாமல் இருப்பது, தன்மை அறிந்து மறப்பது, தன்மை அறிந்து கொடுப்பது இவற்றையும் அடக்குகிறது. பிறர் உழைப்பைத் தனதாக்கி வாழும் வாழ்க்கை வாழ்வோர் தீவட்டி வாழ்க்கை வாழ்வோர், அவர் மனிதர் அல்ல. பிறர் வாழ, தான் உழைத்துத் தேயும் வாழ்க்கை பெருந்தன்மை பெற்றிலங்கும் மெழுகின் வாழ்க்கை.

இன்றைய தலைமுறையினர் பெருந்தன்மையைத் தொலைத்தவர்களாகவே காணப்படுகின்றனர். பெருந்தன்மையைப் பிரதிபலிக்கும் நற்குணங்கள் அருகி வருவதைக் காணமுடிகின்றது. நற்குணங்களைக் கொண்டிருப்பதற்கு தகைமைகள் எதுவும் தேவையில்லை. வயது வேறுபாடோ, ஆண் பெண் பேதமோ, ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் எனும் வித்தியாசங்கள் இல்லாதது. பெருந்தன்மைக் குணம் எல்லோரிடமும் இருக்கவேண்டிய ஒன்று. மனிதரின் இதயங்கள் அழுக்காறினால் நிரம்பியுள்ளதே இதற்குக் காரணம். ஒருவர் செய்யும் தீங்கால் மற்றவர் அதிகம் பாதிக்கப்படுவாரானால் அவர் பழிவாங்கத் துடிப்பார். பழிவாங்கும்வரை அவருக்குத் தூக்கம் அரைகுறைதான். எந்நேரமும் மனத் தாக்கம்தான். அதுபற்றிய யோசனைதான். நோயாளிபோன்று மாறிவிடுவார். தனக்குத் தீமை செய்தவனை அந்தக் கணமே அவர் மன்னித்திருப்பாரேயானால் இந்த நிலை அவருக்கு ஏற்பட்டிருக்காது.



பெருந்தன்மைக் குணம் அமைந்துவிட்டால் எத்தனையோ பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வு கிடைத்துவிடும்.

தற்போது உலக நாடுகளில் போர் மேகங்களால் மக்கள் அச்சத்தில் உறைந்து காணப்படுகின்றனர். இஸ்ரேல் பாலஸ்தீனப் பிரச்சினையில் இரு நாட்டின் தலைவர்களும் பெருந்தன்மையைக் கடைப்பிடித்தால் பெரும் அழிவுகளைத் தவிர்க்க முடியும். இல்லையேல் மூன்றாம் உலகப் போர் மூளும் அபாயநிலை தோன்றும். இதனால் ஏற்படும் விளைவுகளுக்குக் காலம்தான் பதில் கூறவேண்டும். இதயத்திலும் மனதிலும் அனைவரிடமும் எப்பொழுதும் நல்ல உணர்வுடன் இருக்கவேண்டும் என்பதே பொருள். எதைப்பற்றியும் எவரைப்பற்றியும் மனதில்கூட ஒருபோதும் தீய எண்ணங்கள் இருக்கக்கூடாது. பெருந்தன்மையுடைய இதயம் உள்ளோர் எப்பொழுதும் மற்றவர்களது சந்தோஷத்தினால், மகிழ்ச்சியினால் தாங்களும் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பர். அனைவரிடமும் சுமூகமாகவும் கனிவுடனும் நடந்துகொள்வர்.

தாராள இதயமான பெருந்தன்மை ஒருவருக்கு இருப்பதென்பது ஒருவருக்கு ஒருவர் இணக்கமாக வாழ இயலும் மற்றும் முயற்சி செய்வதுமாகும். அத்துடன் கடவுளின் பரிபூரணங்களில் ஒன்று. எல்லாம் வல்லவரின் அன்பு, கருணை மற்றும் நீடிய பொறுமை ஆகியவற்றில் வெளிப்படுகிறது. “இன்மை ஒருவருக்கு இளிவன்று சால்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்” என்கிறார் வள்ளுவர். அதாவது, இன்னல்கள் ஒருவருக்கு இழிவானது இல்லை, பெருந்தன்மை என்ற வலிமை திடமாக உண்டானால், “மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்” என்கிறது வள்ளுவம். அதாவது, மேல்நிலையில் இருந்தாலும் மேன்மைக் குணமாகிய பெருந்தன்மை இல்லாதவர் மேன்மையானவர் அல்லர். “மருந்தோ மற்று ஊன் ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடழிய வந்த இடத்து” என்கிறது குறள். அதாவது, தம் குடிக்குரிய பெருந்தன்மை சிறப்புக்கெட நேர்ந்தபோது மானம்விட்டு உடம்பைக் காப்பது பிறவிப் பிணிக்கு ஏற்ற மருந்தாகுமோ? நிறைவான பண்பினைப் பாதுகாப்பது என்றால் நாம் பெருந்தன்மையைக் கண்போல் காக்கவேண்டும். கெட்ட நோக்கமின்றி மற்றவர் மனம் புண்படாத இனிய சொற்களைச் சொல்பவருக்கு இப்பிறவி மட்டுமின்றி அடுத்த பிறவியிலும் நல்லதே நடக்கும். மிக உயர்ந்த நிலையில் இருந்தாலும் பண்பு இல்லாதோர் தாழ்ந்தவர்களே.

மனிதர் பெருந்தன்மை என்ற பண்பு நிலையிலிருந்து மாறிவிட்டால் தலையிலிருந்து உதிர்ந்த மயிரின் நிலைக்குத் தள்ளப்படுவர். பெருமை, சிறுமை என்பன முறையே பெருந்தன்மை வாய்ந்த பெரியோரையும் சிறுமைக் குணமுடைய சிறியோரையும் குறிக்க வந்தவைகளாகும். ஒருவருக்கு சான்றாண்மை எனப்படும் கல்வி கேள்விகளில் நிறைந்த ஒழுக்கம், பெருந்தன்மை, பொறுமை, மேன்மை, நற்குணம், மனஅமைதி ஆகியவற்றில் வலிமையும் உறுதியும் உண்மையும் நிலையாகப் பெற்றால் அவர் செல்வத்தில் வறியவராக இருந்தாலும் அவருக்கு வறுமை ஓர் இழிவு அல்ல. உள்ளம் அறிந்து பொய்யாமை நினையாதவர்கள் உலகத்து மக்கள் உள்ளத்தில் எல்லாம் புகழோடு நிலைத்திருப்பர் என்பதை தமது உண்மையான தூய தொண்டின்மூலம் பெருந்தன்மையை மெய்ப்பித்து வெற்றி கண்டவர் அண்ணல் காந்தியடிகள். காந்தியடிகள் என்றவுடன் நமக்கு முன்தோன்றி நிற்பது அகிம்சையும் சத்தியமும்தான்.



“இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு” நமக்கு துன்பம் செய்தவருக்கும் நாம் நன்மை செய்யவில்லை என்றால் நம்முடைய பெருந்தன்மை வேறு எதைச் சாதிக்கப்போகிறது என்கிறார் வள்ளுவர். கண்ணோட்டம் என்ற சிறந்தகுணம் இருந்தால்த்தான் இந்த உலகம் அழியாமல் நிலைபெற்றிருக்கின்றது. கண்ணோட்டம் என்ற சொல்லுக்குப் பொருள் இரக்கம் பொறுத்தருளும் மரபு. மேலும் நாம் மற்றவர்களுக்கு அள்ளிக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எம்மால் இயன்ற சிறு உதவிகள், ஆறுதல் வார்த்தைகள் என்பனவே போதும். அவை மிகவும் பயனுள்ளனவாக ஏனையோருக்கு உதவும். ஒரு தனி மனிதனிலிருந்து அதிகாரத்தில் இருப்போர்வரை பெருந்தன்மைக் குணம் அமைந்துவிட்டால் எத்தனையோ பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வு கிடைத்துவிடும். ஆனால் இந்த உயரிய குணம் மெல்ல, மெல்ல மறைந்து வருகின்றது. இதனால் ஏற்படும் விளைவுகளுக்குக் காலம்தான் பதில் கூறவேண்டும்.






# விஜய் சந்திப்பில் என்ன நடந்தது? – நேர்காணல் – கே.எஸ். ராதாகிருஷ்ணன்

## நேர்கண்டவர் : கண்ணன்

தமிழக அரசியல் களத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இருப்பவர் கே.எஸ். ராதாகிருஷ்ணன். வழக்கறிஞர். தமிழர், தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் அவர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்பட்டவர். காமராஜர், கருணாநிதி, வைகோ, முரசொலி மாறன், ராம்விலாஸ் பஸ்வான் எனப் பல தலைவர்களுடன் நெருக்கமான தொடர்பிலிருந்தவர். ஆனால், இதுவரை எம்.எல்.ஏ., எம்.பி. என எந்தப் பதவியையும் வகித்ததில்லை. அவரைச் சந்தித்தோம்.

**கேள்வி:** நடிகர் விஜய் கட்சி ஆரம்பித்த போது நீங்கள், பழ. கருப்பையா, ஜெயந்தி நடராஜன் போன்றவர்கள் விஜய்யை வழி நடத்த முயற்சித்ததாகவும் அதற்குச் சிலர் தடையாக இருந்ததாகவும் சமீபத்தில் ஒரு பதிவில் குறிப்பிட்டிருந்தீர்கள். அப்போது என்ன நடந்தது என்று சொல்ல முடியுமா?

**பதில்:** தமிழ்நாட்டில் மாற்று அரசியல் வேண்டும் என நாங்கள் நினைத்தோம். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் எங்கள் பேச்சைக் கேட்க வரமாட்டார்கள். வட இந்திய மாநில மக்களை முட்டாள்கள் என்கிறோம். ஆனால், அங்கே கர்பூரி தாக்கூர் பேசினால் அவ்வளவு கூட்டம் வருகிறது. தமிழ்நாட்டில் சினிமா பின்புலத்துடன் இருந்தால் மட்டும்தான் பேச்சைக் கேட்கின்றனர். ஓட்டுக்குப் பணம் கொடுத்தால் மட்டும்தான் ஓட்டுப் போடுவர். இப்படி இருக்கையில் விஜய் வருகிறார். மக்களிடம் சினிமா மூலமாகவும் டிவி மூலமாகவும் எளிதில் சென்றடைந்தவர். அவரை ஆதரித்து அவர்மூலம் மாற்று அரசியலுக்கு முயற்சிக்கலாம் என்று 'தினமணி' நாளிதழில்கூட ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதனடிப்படையில்தான் அவரை நான் சந்தித்துப் பேசினேன்.

விஜய்யுடன் இருக்கும், அவருக்கு ஆலோசனை கூறும் நபர்கள் யாரும் சரியில்லை. புஸ்ஸி ஆனந்துக்கு பாண்டிச்சேரி அரசியல்தான் தெரியும். பாண்டிச்சேரியில் காங்கிரஸ் வெற்றிபெறும் ஆனால், தமிழ்நாட்டில் காங்கிரஸ் வெற்றி பெறாது. மரக்காணம் என்ற சின்ன ஊருக்கு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் அவ்வளவு வித்தியாசம். புஸ்ஸி ஆனந்துக்கு தமிழ்நாட்டு அரசியல் தெரியுமா? விஜய்யை வழிநடத்தும் இரண்டாவது நபர் ஜான் ஆரோக்கியசாமி. (கிண்டலாக) அவர் பெரிய அறிவாளி. எனவே, இவ்விரண்டும் நமக்குச் சரிப்படாது என்று நாங்கள் ஒதுங்கி விட்டோம்.

**கேள்வி:** இப்போது அ.இ.அதிமுகவில் இருந்து செங்கோட்டையன் தலைமையில் ஒருசிலர் விஜய் கட்சியில் போய்ச் சேர்ந்து இருக்கின்றனர். எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** அதிமுக விசுவாசிகள் எம்.ஜி.ஆர். சின்னமான இரட்டை இலையைத்தான் பெரிதாகப் பார்ப்பர். கட்சியை விட்டுப் போனவர்களைப் பார்க்கமாட்டார்கள். எடப்பாடியிடம்தான் இப்போது கொடி, சின்னம் இரண்டும் இருக்கிறது. எனவே, செங்கோட்டையன் தலைமையில் சென்றவர்களுக்கும் சரி, இனிமேல் சேரப் போகிறவர்களுக்கும் சரி பெரிய ஓட்டு வங்கி கிடையாது. விஜய்க்கு பொதுவாக 14 சதவிகித ஓட்டுக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் சேர்வதால் 3 சதவிகித ஓட்டு கூடுதல் கிடைக்கலாம். மொத்தம் 17 சதவிகித ஓட்டுத்தான் கிடைக்கும். ஆட்சி அமைப்பதற்கு அது போதாது. கூட்டணி இல்லாமல் விஜய்யால் வெற்றி பெற முடியாது.



தமிழ்நாட்டில் கூட்டணி இல்லாமல் தனியாக யாராலும் ஆட்சியமைக்க முடியாது என்பதுதான் உண்மை நிலை. 1967 தேர்தலைப்பற்றி விஜய் சொல்கிறார். ஆனால், அந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற அண்ணா தலைமையிலான கூட்டணியை விட கூட்டணி இல்லாமல் தனியாக நின்ற காங்கிரஸ் ஒரு லட்சம் ஓட்டு கூடுதலாக வாங்கியது. ஆனாலும் தோற்றனர். ஒரு லட்சம் ஓட்டு குறைவாக வாங்கிய திமுக வெற்றி பெற்றது. இது நமது தேர்தல் நடத்தையின் விசித்திரம். இப்படியொரு பலமான கூட்டணியை உருவாக்கியதால் தான் அண்ணாவால் காங்கிரஸைத் தோற்கடிக்க முடிந்தது. ராஜாஜி, ராமமூர்த்தி இவர்கள் போன்ற சிறுசிறு கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்தார், அண்ணா. இதனுடன் அன்றைய சூழ்நிலைகளும் அண்ணாவுக்கு உதவியது. அன்று ரேஷன் கடையில் அரிசி கிடைக்கவில்லை. கோவையிலும் சென்னையிலும், நாங்கள் வந்தால், ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசி தருவோம் என்று பிரசாரம் செய்தார் அண்ணா. அப்போது தமிழ்நாடு முழுவதும் இந்தி திணிப்பு எதிர்ப்பு அதிகமாக இருந்தது. அதையும் பயன்படுத்திக்கொண்டார். 1967இல்எம்.ஆர். ராதாவால் எம்ஜிஆர் சுடப்பட்ட சம்பவமும் திமுக வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. அன்றிலிருந்து இன்றுவரை கூட்டணி இல்லாமல் எப்போதும் திமுக வெற்றி பெற்றது இல்லை. எம்.ஜி.ஆர். கூடக் கூட்டணி இல்லாமல் ஒருமுறை வெற்றி பெற்றுள்ளார். ஆனால், எம்.ஜி.ஆருடன் விஜய்யை ஒப்பிட முடியாது. எம்ஜிஆரைப்போல நம்மால் விஜய்யைப் பார்க்க முடியாது.

வைகோ அமைத்த மக்கள் நலக் கூட்டணியைப்போல்த்தான் செங்கோட்டையனைச் சேர்த்து விஜய் அமைக்கும் கூட்டணியும் அமையும். இதனால், ஆட்சியைப் பிடிக்க முடியாது.

**கேள்வி:** நீங்கள் விஜய்யை சந்தித்த போது என்ன பேசினீர்கள்?

**பதில்:** சந்திப்பெல்லாம் நடந்தது. ஆனால் அது சரியாக வரவில்லை. பொதுவாக ஒரு பேச்சுவார்த்தை, உரையாடல் நடந்து கொண்டிருக்கும்போது எதிர்ப்பக்கத்தில் இருந்தும் பேச்சோ அல்லது கேள்விகளோ வரவேண்டும். அப்போதுதான் அவர்கள் நம் பேச்சைக் கேட்கின்றனர், அதைப் புரிந்துகொள்கின்றனர் என்று நமக்குத் தெரியும். இல்லையென்றால் அவர் என்ன நினைக்கிறார் என்றோ நம் பேச்சைக் கேட்கிறாரோ என்றோ நமக்குத் தெரியாது. சும்மா கேட்டுகொண்டு அமைதியாக இருந்தால் எப்படி? விஜய் அப்படித்தான் இருந்தார். அவர் நம் பேச்சைக் கேட்கிறாரா, அதைப் புரிந்து கொள்கிறாரா என்று எனக்குச் சந்தேகம். அன்றே எனக்கு இது சரியாக வராது, இவருக்கு ஒன்றும் புரியவில்லை என்று தோன்றிவிட்டது. விஜய் நாளிதழ்கள்கூடப் படிப்பதில்லை என்று நினைக்கிறேன். அவருக்கு எதுவும் தெரியவில்லை.

**கேள்வி:** உங்களுடைய சந்திப்பு எவ்வளவு நேரம் நடந்தது? நீங்கள் என்ன சொன்னீர்கள்?

**பதில்:** நான் என்ன சொன்னேன் என்பதை இங்கே சொல்வதில் அர்த்தமில்லை. அவருக்குச் சொல்ல வேண்டியது அது. ஆனால், அவருக்கு எந்தப் புரிதலும் இல்லை. அப்போதே நான் விட்டுவிட்டேன். நான் அப்போதே டுவிட் போட்டேனே. நாங்கள் மாற்று அரசியல் வேண்டும் என நினைத்தோம். ஆனால், இது சரியாக வராது என்று அதில் கூறியிருந்தேன்.

**கேள்வி:** விஜய்யுடன் செங்கோட்டையன் இணைகிறார். இது செங்கோட்டையனுக்கு லாபமா? இல்லை விஜய்க்கு லாபமா?

**பதில்:** செங்கோட்டையனுக்குத்தான் லாபமாக இருக்கும். நீண்டகால அரசியல் பின்புலம் உள்ளவர். எனவே அதற்கான தகுதியுடன் பதவி கொடுப்பார்கள். அதை அவர் வெளியே சொல்லிக்கொள்ளலாம்.ஆனால் அவர் சொல்வதை அவர்கள் கேட்பார்களா என்பது சந்தேகம்தான்.

**கேள்வி:** உங்களைப்போல சீமானும் விஜய்யை வழிநடத்த முயன்றார். உங்களைப் போன்ற மூத்த தலைவர்கள், அரசியலில் நீண்டகால அனுபவமுள்ளவர்கள் ஆலோசனை சொல்லத் தயாராக இருந்தும் அதை அவர் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இல்லை. என்ன காரணம்?

**பதில்:** தமிழ்நாட்டின் அரசியல் 1991-இலிருந்து மாறிவிட்டது. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நல்லகண்ணு, சி. மகேந்திரன், வாசுகி, ஜி. ராமகிருஷ்ணன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தஞ்சை ராமமூர்த்தி, பாஜகவைச் சேர்ந்த இல. கணேசன் மற்றும் பழ. நெடுமாறன், பழ கருப்பையா இவர்கள் எல்லோரும் மதிப்பு மிக்க தலைவர்கள்தான். கட்சிகள், கொள்கைகள் வேறு வேறாக இருந்தாலும் இவர்கள்மீது எல்லோருக்கும் மரியாதையும் இருக்கிறது. ஆனால், ஏன் இவர்களுக்கு அரசியல் களத்தில் ஒரு பதவி இல்லை. இவர்களால் ஏன் வெற்றிபெற முடியவில்லை. பழ. நெடுமாறன், வைகோ போன்றோர் தோல்விதானே அடைந்தனர்.

இப்போது தமிழ்நாட்டு அரசியலில் தரமான ஆட்கள் என்று யாரும் இல்லை. விஜய், அஜித், த்ரிஷா, விஷால் மாதிரி நடிகர்களுக்குத்தான் இங்கே வாய்ப்புகள் இருக்கிறது. இப்போது எல்லாம் காசு தான். பணம் இருந்தால் அரசியலுக்கு வரலாம், உடனே பதவிகள் வாங்கலாம். மாற்று அரசியலுக்கு இனி வாய்ப்பில்லை. யார் வந்தால் என்னவென்று நம் வேலையை நாம் பார்க்க வேண்டியதுதான்.

பாஜக எனக்கு உதவியது. அமித்ஷா என் கிராமத்துக்கு உதவினார். என்னைப் பாஜகவுக்கு அழைத்தார். பாஜக தமிழ் நாடு தலைவராக இருக்கும் நயினார் நாகேந்திரன் என் நண்பர். எனவே, நான் பாஜகவில் சேர்ந்துள்ளேன்.

**கேள்வி:** விஜய்யின் தவெகவில் ஜான் ஆரோக்கியசாமிதான் பல வியூகம் வகிக்கிறார் என்று சொல்கிறார்கள்? அவரைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** (கிண்டலாக) ஆமாம், ஆமாம் அவர் பெரிய அறிவாளிதான். அவருக்கு எல்லாமே தெரியும். நாலடியாரைப்பற்றிக் கேட்டால் சொல்லிவிடுவார், மில்டனை பற்றிக் கேட்டால் சொல்லிவிடுவார், ஷேக்ஸ்பியர் பற்றிக் கேட்டால் சொல்லி விடுவார். அவர் விஜய்க்குக் கிடைத்த வரம். வாழ்க விஜய். அவரை வைத்து எல்லாம் நடத்தட்டும். நான், ஜான் ஆரோக்கியசாமியைப் பார்க்கவும் இல்லை பேசவும் இல்லை.

**கேள்வி:** புஸ்ஸி ஆனந்த், ஜான் ஆரோக்கியசாமி இவர்களுக்குப் பதில் விஜய் தனது அப்பா எஸ்.ஏ.சி.யை வைத்திருக்கலாம் அது இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்று சிலர் சொல்கிறார்கள்?

**பதில்:** இதிலிருந்தே பார்த்துக் கொள்ளுங்கள். அப்பா, அம்மா சொல்லும் பேச்சைக் கேட்டு அவர்கள் ஆசைப்படி நடப்பது தானே சிறந்தது. அப்பா, அம்மாவைக்கூட மதிக்காதவரை இவர்கள் தலைவர், பெருந்தலைவர், இளந்தலைவர் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

**கேள்வி:** கரூர் சம்பவத்திற்குப் பிறகு விஜய்யிடம் ராகுல் காந்தி பேசியதாகவும் திமுகவிடம் இணக்கமாகப் போகச் சொன்னதாகவும் கூறப்படுகிறது. நீங்கள் இதை எப்படி பார்க்கிறீர்கள்?

**பதில்:** ஜெயலலிதாவை வெற்றிபெற வைக்க அமைக்கப்பட்ட மக்கள் நலக் கூட்டணி மாதிரி, திமுகவை வெற்றிபெற வைப்பதற்காக உருவாக்கப்பட்ட மக்கள் நலக்கூட்டணிதான் விஜய்யோ என்று இதனால்த்தான் சந்தேகம் வருகிறது.

நாமும் நமது இல்லமும் 690

# ஒன்ராறியோ Bill – 60



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பிரதேசசபை, நகரசபை, கிராமசபை போன்றவற்றின் பல அதிகாரங்கள் மாகாண அமைச்சரின் கைகளிற்கு மாற்றப்படுகின்றது. அத்துடன் ஆதன உரிமையாளர், வாடகைக்கு இருப்பவர் களிடையேயான உரிமைகளும், உரிமை யாளரிற்குச் சார்பாக மாற்றப்படுகின்றது.

ஆரம்பத்திலிருந்தே பல பக்கங்களில் இருந்தும், இம்மசோதாவிற்கு எதிர்ப்புகள் வந்தபோதிலும், அரசிடம் இருக்கும் பலம் மசோதா 60, இலகுவாக சட்டமாக மாற்றப்பட்டுள்ளது. (நவம்பர் 29, 2025)

## முக்கிய நோக்கங்கள்

* மாகாண அரசு 'ஆதனங்கள் மற்றும் பொது கட்டுமானங்களை விரைவாகக் கட்டுவதற்கும், உள்கட்டமைப்புகளை (infrastructure) விரைவாக உருவாக்கு வதற்கும்" Bill-60ஐ சமர்ப்பித்துள்ளது.

* திட்டமிடும் சட்டங்கள், குடியிருப்பு வாடகை சட்டம் போன்ற பல சட்டங்களை இதில் திருத்துவதற்கான பன்முகப்பட்ட (Omnibus) முயற்சி உள்ளது.

* அரசு கூறுவதனால், தாமதங்களைக் குறைத்து, வீட்டு வசதி வழங்கலையும் கட்டுமான வேகத்தையும் அதிகரிக்க இது செயல்படும்.

## முக்கிய மாற்றங்கள்

* சட்டம் பல்வேறு பகுதிகளை/பிரிவு களைக் (Schedules) கொண்டுள்ளது. அதில் Planning Act, Residential Tenancies Act, 2006, Construction Act முதலியவை திருத்தப்படுகின்றன.

* வாடகையாளர்களுக்கு எதிரான வெளியேற்றும் (Eviction) செயல் முறைகள் எளிதாக்கப்படுகின்றன. வாடகை செலுத்தாமை காரணமாக வெளியேற்ற நடவடிக்கைகள் விரைவாக நடைபெறும் வகையில் சட்டச்சீர்வுகள் உள்ளன. (City of Toronto)

* உள்ளூராட்சியின் அதிகாரங்களில் மாகாண அரசின் உள்ளீடு அதிகரிக்கிறது. இவற்றின் கட்டுப்பாடுகள் குறைக்கப்படுகின்றன.

மொத்தத்தில் Bill-60 என்ற ஒன்றாரியோ வில் வீட்டுவசதி மற்றும் கட்டுமான வேகத்தை அதிகரிக்க அரசு செலவுகளை குறைக்க உதவலாம். ஏற்கனவே இருக்கும் சட்டம் உள்ளூர் சபைகளின் அதிகாரங்கள், மாகாண அளவை மீறும் வகையில் வடிவமைக்கப்பட்ட சட்டமாகும். Bill-60மூலம் வாடகைச்சட்டம், திட்டமிடல் சட்டம், கட்டுமானச்சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் திருத்தப்படுகின்றன. இதன்மூலம் நகராட்சிகளின் தன்னாட்சி குறையும். வாடகையாளர்களின் பாதுகாப்பு குறைய வாய்ப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## ஆதன உரிமையாளர் Vs வாடகையாளர்

1. வாடகை செலுத்தாமல் இருந்தால், வெளியேற்றும் நெறிமுறை இப்போது 14 நாட்களுக்குப் பதில் 7 நாட்களுக்குக் குறைக்கப்படுகின்றது.

2. வாடகையாளர்கள் புகார் செய்ய / வழக்கில் பேச, நிலுவை வாடைகையில் உள்ள தொகையில் குறைந்தது 50%ஆன நிலுவைப்பணம் முன்கூட்டியே செலுத்தி யிருக்க வேண்டும்.

3. அடிக்கடி தாமதமாக வாடகை செலுத்துபவர்களை அரசு 'தொடர்ந்து தாமதமாக செலுத்துபவர்' என வகைப் படுத்தலாம். அதனால் வேகமாக இவர்களை வாடகையிலிருந்து வெளி யேற்ற முடியும்.

4. LTB முடிவை மீளாய்வு / அப்பீல் கேட்க 15 நாட்கள் மட்டுமே கிடைக்கும் (முன்பு 30 நாட்கள்).
(LTB = Landlord Tenant Board)

5. LTBஇற்கு வெளியேற்றத்தைத் தாமதமாக் கும் அதிகாரம் இப்போது குறைக்கப்படும்.

6. வெளியேற்ற ஆணைகளை (Default Orders உட்பட) ரத்துச் செய்யும் வாய்ப்பில் கட்டுப்பாடு வரும்.

7. N12 என்ற படிவம் (Form) (Landlord சொந்தப் பயன்பாடு)மூலம் வெளியேற்றம் செய்யும்போது நான்கு மாதம் முன்கூட்டிய அறிவிப்புக் கொடுத்தால், வீட்டு வாடகை யாளர் ஒரு மாத (1Month) இழப்பீட்டுத் தொகையை செலுத்த வேண்டியதில்லை.

8. LTB வெளியேற்றப்படும் வழக்குகளை யும், முடிவுகளையும் விரைவாக மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் முறை.

9. அனைத்து LTB அறிவுறுத்தல்களும் (Notice) நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும்.

## அடமானக்கடன்: 2024இன் முதல் 6 மாதங்கள் Vs 2025இன் முதல் 6 மாதங்கள்

* அடமானக்கடன் பெறுவது அதிகரித்துள்ளது.

* இரண்டாம்தர நிதி நிறுவனங்கள் அதிக வியாபாரத்தைப் பெற்றுள்ளன.

* அத்துடன் முதல்தர ஆறு (6) வங்கி களும், மற்றும் Credit Unionகளும் மேலதிக வியாபாரத்தைப் பெற்றுள்ளன.

* கனடா அளவில் அடமானக் கடன் செலுத்தாமல் இருப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. எனினும், ஒன்ராறியோ வில் இந்தப் பெறுமதி சிறிதளவு அதிகரித்துள்ளது.

## ரொறொன்ரோ அடுக்குமாடி மனைத் தொகுதி

* 2025இல் ரொறொன்ரோவில் ஒன்பது (9) அடுக்குமனைத் தொகுதிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

* 2024இல் இப்பெறுமதி பதினொன்றாகக் (11) காணப்பட்டது. (மொத்த மனைகள் / Units 2581)

* 2024இல் பதினாறு (16) மனைத் தொகுதிகள் (5045 அலகுகள்) சந்தைப் படுத்தப்பட்டபோதிலும் வியாபாரம் 40%இற்குக் குறைவாகவே காணப்படுகின்றது.

தொடர்ச்சியாக, புதிய தொகுதிகள் இரத்துச்செய்யப்படுவதால் எதிர்காலத்தில் 2028இற்குப் பிற்பாடு ஆதனங்களிற்கு அதிக கோரிக்கைகள் (வேண்டுகோள்கள்) ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.









தொடர்ச்சி 18ஆம் பக்கம்

Vlambaram - December 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-30 5:57 PM Page 9



# தமிழர் தம் பண்பாட்டில் பேச்சுக்கலையும் அதன் உலகமயமாதலும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## 7. இலக்கிய உலகின் பேச்சாளுமைகள் (1960கள்)

தமிழ்மொழிப் பற்றாளர்கள், மொழிப் பாண்டித்தியம் பெற்ற இலக்கிய புலமை மிக்கவர்கள், தமிழ் மொழிக் காவலர்கள் போன்ற பலர் நிறைந்து குவிந்த காலம் என ஒன்றிருந்தது. 1960களில் தமிழகத்தில் தமிழ் மொழியுணர்வாளர்களின் பொற்காலம்.

ஏராளமான தமிழறிஞர்கள் தம் தெளிவான பேச்சாற்றலால் நெடும் பயணங்களை மேற்கொண்டனர். சிதறிக் கிடந்த தமிழ் நேயர்களைத் தேடிச் சென்றனர். தமிழ்ப் பேச்சால் தமிழ் மொழியைப் பரப்பினர். இலக்கிய ரசனையை மக்கள் மயப்படுத்தினர். பேச்சாளராக, தமிழ் மொழி பரப்புரையாளராக மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்னாப்பிரிக்கா, மொரீசியஸ் போன்ற பல நாடுகளுக்கும் இடையறாது பயணித்தனர். பின்பு இந்த மையம் கனடாவுக்கு நகர்ந்தது.

சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை, திரு.வி.க. மறைமலையடிகள், மா.பொ.சி. ரசிகமணி, டி.கே.சி., கி.வா. ஜெகந்நாதன் போன்றோர் தமிழ்ப் பேச்சுக் கலைக்கு தனியடையாளங்களை நிலை நிறுத்தியவர்கள். இவர்களைத் தொடர்ந்து வந்து, தமிழை ஆய்வு மொழியாகப் பரப்புவதில் தனிப்பெருமை சேர்க்க பேச்சுக்கலையை வளர்த்தவர் தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகள் ஆவார்.

தமிழ்ப் பேச்சுக்கலையை தமிழ் சமூகத்தின் அடையாளமாக மாற்றியதில் இவர்களது பங்கு முக்கியமானது.

மொழி, பண்பாடு, கலை, அரசியல் சார்ந்த கைமாற்றல்களுக்கு பேச்சுக்கலை துணை செய்கிறது. அறிஞர் - பாமரர் தொடர்பைப் பலப்படுத்திய கலை இதுவே. இன்றும் R. பாலகிருஷ்ணன், இறையன்பு போன்ற இந்திய நிர்வாக சேவை அதிகாரிகளது எளிமைப்படுத்திய பேச்சுக்கள் அதிக பயனாளிகளைத் திரட்டி வருகின்றன. அகிலன், பார்த்தசாரதி, ஜெயகாந்தன், வெங்கடேசன், ஜெயமோகன், வலம்புரிஜான், மனுஷ் புத்திரன் போன்றவர்களது இலக்கியப் பேச்சுக்கள் பெரியதோர் கேட்போர் தொகுதியை



உருவாக்கி வந்துள்ளன. பண்பாட்டு புதிய பரப்பாக அது விரிந்து கிடக்கிறது.

## 8. பட்டி மண்டப பேச்சாளரும் தனிப் பேச்சாளரும்

பேச்சைத் தமது தொழிலாக வடிவமைத்து புகழும், செல்வமும் சேர்க்கும் அறிஞர் குழாம் ஒன்றும் வளர்ந்து வருகின்றது. கேட்டல் என்பது குதூகலம் தரும் நுகர் பண்டமாக (Commodity) கட்டமைக்கப்பட்டு வருகிறது. இதனை வடிவமைத்தல், வழங்குதல், பாதுகாத்து வைத்தல், வேறு வடிவங்களில் வழங்குதல், காப்புரிமை பெறுதல், வருமானங்களை ஒழுங்குபடுத்தல் என்ற வகையில் மேடைப்பேச்சும் அதன்வழி வளர்கின்ற செயல்முறைகளும் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

மதிநுட்ப சொத்துரிமைச் சட்டம் (Intellectual Property Rights - IPR) என்பது ஒருவரது சொந்த உழைப்பில் உருவாக்கப்படும், பேச்சு, எழுத்து, செயல் சார்ந்த எத்தகைய ஆக்கத்திற்கும் படைப்பாளியே உரிமை கொண்டவன், அவனது அனுமதி பெறாமல் கட்டணம் செலுத்தாமல் அவனது ஆக்கத்தைப் பிறர் பயன்படுத்துவது குற்றமாகும்.

ஒருவரது படிப்பறிவு, பட்டறிவு மற்றும் திறன், நேரம், உழைப்பு என்பவற்றினால் நல்லதொரு மேடைப் பேச்சு உருவாகின்றது. இது ஒரு பொருளாதார மதிப்புக் கொண்ட ஒரு பண்டம்தான். இதனால் மதிநுட்ப சொத்துரிமைச் சட்டம் பேச்சு உற்பத்திக்கும் செல்லுபடியாகும். இது அறிவுசார் உழைப்பாளி ஒருவனின் உற்பத்திதான்.

தமிழகத்தில் சுகி சிவம், சாலமன் பாப்பையா, ஞானசம்பந்தன் போன்றோர் தலைசிறந்த தனிப்பேச்சாளர்களாக அங்கீகாரம் மற்றும் புகழ் பெற்றவர்கள் பட்டிமன்றத் தலைவர்களாகவும் பங்களிப்புச் செய்து வருபவர்கள். நல்ல படிப்பு, தொடர்ச்சியான தேடல், நடைமுறைகள் மீதான கூர்மையான அவதானங்கள், நிறைந்த மொழிப்புலமை, சிறந்த குரல் வளம், ஆற்றொழுக்கும் போன்ற தங்கு தடையற்ற பேச்சாற்றல், எளிய நடைமுறை உதாரணங்களைப் பொருத்தமான இடங்களில் பொருத்தும் திறன், மென்மையானதும் இதமானதுமான நகைச்சுவையுணர்வைப் பரவ விடுதல், குன்றாத முகமலர்ச்சி, மல்லிகை மலர் ஒத்த வெள்ளுடை என்பவற்றின் முழுமையை மேடைகளில் இவர்களிடம் காணலாம்.

சபையோரின் மனதை வென்ற ஆளுமைகள் இவர்கள். தாம் எதிர்பார்ப்பதை சலிப்பில்லாமல் தருவார்கள் என்ற நம்பிக்கையை சபையோரிடம் நிறைவாக வளர்த்திருப்பவர்கள் இவர்கள்.

தனிப் பேச்சாளர்களாக மட்டுமன்றி பட்டிமன்றங்களின் தலைவர்களாகவும் புகழ் பெற்றவர்கள். தமிழகத்தில் பல பகுதிகளுக்கும், பல வைபவங்களுக்கும் பல கல்வி நிறுவனங்களுக்கும் ஆர்வமுள்ள அழைப்பின் பேரில் சென்று உரையாற்றி உன்னதம்பெற்ற ஆளுமைகள் இவர்கள்.

கடுமையான மூளை உழைப்பாளர் இவர்கள். கேட்போர் எவ்விதம் மூளைக் களைப்புமின்றி அமர்ந்திருக்க பட்டிமன்றம் தொடங்கியதிலிருந்து நிறைவு பெறும்வரை மூளையும், கண்களும், உணர்வுகளும் துள்ளும் மழலைகள் போல உயிர்ப்புடன் செயற்பட்டபடியே இருக்கும். இதுவே இவர்களது தொழில் முறை ஒழுகல் ஆகும். தொழில்முறை பண்பாட்டு செயல்நெறியாகும்.

பெண் பேச்சாளர்கள் ஆண்களை விடவும் இந்தப் பேச்சுக்கலை சாம்ராஜ்யத்தில் இளவரசிகளாக வலம் வருகின்றனர். சீரான தொழில் வாழ்க்கை கொண்டவர்கள் அல்லது நிறைவு செய்தவர்கள், வங்கியாளர் மற்றும் பேராசிரியர்கள் அல்லது வழக்கறிஞர்கள் நிறைந்த வாசிப்பும்



சற்றும் தொய்ந்து போகாத உற்சாகமும் கொண்டவர்கள். சொற்களும், மொழியும், தர்க்கமும், ஒலியின் மேலாண்மையும் இவர்களிடம் சிக்கித் தவிக்கும்.

பாரதி பாஸ்கர், பர்வீன் சுல்தான், ஜெயந்தி பாலகிருஷ்ணன், திருமதி. கவிதா ஜவாகர் போன்று பலர் உலகத் தமிழ் பேச்சுக் கலைஞர்களாக வளர்ந்துள்ளனர், வலிமை பெற்றுள்ளனர். உலகம் முழுவதும் பருவ காலத்துப் பறவைகள்போல பறந்து, பறந்து பேச்சரங்குகளை ஆனந்தப் பூங்காக்களாக்குகின்றனர். இவர்களை வரலாறு எப்போதும் தன் நினைவில் நிறுத்தும்.



இவர்கள் சினிமா நடிகர்களை விடவும் பல மடங்கு உண்மையான கலைஞர்கள், வெளிப்படையாக, நேரடியாக ரசிகர்களை எதிர்கொள்ளும் திராணி மிக்கவர்கள். பேச்சின் உள்ளடக்கம் இவர்களுடையதே. வெளிப்பாடுகளும் இவர்களுடையதே. ரசிகன் முகம் பார்த்துப் பேசும் உண்மைக் கலைஞர்கள்.

வெட்டியும், ஒட்டியும் பேசும் போதெல்லாம் செலவில்லாத குதூகலத்தோடு சிந்திப்பதற்கு உரிமை பெறுகின்ற பயனாளிகளே பட்டிமன்ற ரசிகர்கள். உலகம் சுற்றிவரவும் உயர்வான ஊதியம் பெறவும் இவர்களது உண்மையான கடின உழைப்பும், எதிர்கொள் திறன்களும் காரணமாகும். உழைப்பு, புகழ் இரண்டுக்கும் உண்மையான உரிமை கொண்டவர்கள் இவர்கள். தமிழ் மொழியின், தமிழ் இலக்கியத்தின், தமிழர் வாழ்வியலின் எல்லாப் பக்கங்களையும் ரசனைக்குரியனவாக்குபவர்கள் இவர்கள்.

இவர்களது பேச்சும், விவாதிக்கும் ஆற்றலும் தூய வளிமண்டலம்போல, அழகிய மேகங்கள்போல எங்கும் பரவும். என்றும் நிலைத்திருக்கும். நவீன தொழில் நுட்பம் சீர்காழியின் குரலையும், சிவாஜியின் இனிமையான தமிழ் ஒலியையும் அடைகாப்பதுபோல பாரதி பாஸ்கரும், பட்டிமன்ற ராஜாவும், பர்வீன் சுல்தானும் தமிழ்கூறும் நல்லுலகினால் பெருமையோடு பாதுகாக்கப்படுவர், நம்பியிருப்போம்.

தொடரும்...



# நானிலம் போற்றும் நட்பு - 78



– அகணி –
authorakani@gmail.com

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ளவற்றில் ஒன்றான கார் நாற்பது நூலில் உள்ள பாடல்கள் சிலவற்றில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளைக் கடந்த இதழிலும் ஆராய்ந்தோம். இன்று கார் நாற்பது நூலில் உள்ள மேலும் சில பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளை ஆராய்வோம்.

இப்பொழுது பாடல் 17இனைக் கவனிப்போம்.

"அறைக் கல் இறு வரைமேல் பாம்பு சவட்டி,
பறைக் குரல் ஏறொடு பௌவம் பருகி,
உறைத்து இருள் கூர்ந்தன்று, வானம் பிறைத் தகை
கொண்டன்று, - பேதை! - நுதல்".

நுதல் என்பது நெற்றி என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "மேகமானது கடல் நீரைக் குடித்து, பறையொலி போலும் இடியை இடித்து, பாறைக் கற்களையுடைய பக்க மலையின் மேல் நீரைச் சொரிந்தது. ஆனால், உனது நெற்றி பிறை மதியின் அழகைக் கொண்டதே என்று தோழி தலைவியிடம் கூறினாள். மழை வந்தால் கார்காலம் வந்துவிட்டது, உன் அழகைப் பருக தலைவன் வருவான் என்பது உட்கருத்து".

இந்தப் பாடலிலும் தோழி தலைவியின் அழகைப் புகழ்ந்ததோடு தலைவன் விரைவில் வருவான் என்று உரைக்கின்றாள். இப்பொழுது பாடல் 18இனைக் கவனிப்போம்.

"கல் பயில் கானம் கடந்தார் வர, ஆங்கே
நல் இசை ஏறொடு வானம் நடு நிற்ப,
செல்வர் மனம்போல் கவின் ஈன்ற, நல்கூர்ந்தார்
மேனிபோல் புல்லென்ற காடு".

நடுநிற்ப என்பது நடுவு நின்று என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "மலை நெருங்கிய காட்டைக் கடந்து சென்ற தலைவர் வருங்காலம் வந்த பொழுது, மேகங்கள் எங்கும் பெய்தலால், பொலிவிழந்த காடுகள் பொருளையுடையார் மனம் போல அழகைத் தந்தன என்று தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியிடம் கூறினாள்".

இந்தப் பாடலிலும் தோழி இயற்கை நிகழ்வுகளை எடுத்துக்காட்டி தலைவன் விரைவில் வருவான் என்று உரைக்கின்றாள். இப்பொழுது பாடல் 19இனைக் கவனிப்போம்.

"நாஞ்சில் வலவன் நிறம் போலப் பூஞ் சினைச்
செங் கால் மராஅம் தகைந்தன் பைங் கோல்
தொடி பொலி முன் கையாள் தோள் துணையா வேண்டி,
நெடு இடைச் சென்றது, என் நெஞ்சு".

தகைந்தன என்பது மலர்ந்தன என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "கலப்பைப் படையால் வெற்றியுடையவனது கவண்ணிறம்போல, வெண்கடம்புகள் மலர்ந்தன. என் மனம் பசுமையாகிய திரண்ட வளைகள் உடைய முன்னங்கையையுடையாளின் துணையை வேண்டி நெடிய காட்டு வழியைக் கடந்து சென்றது என்று தலைவியிடத்து நான் செல்வதற்குள் என் மனம் சென்றுவிட்டது என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்".

இந்தப் பாடலில் தலைவன் தனது தோழனிடம் (பாங்கனிடம்) தலைவி மீதுள்ள காதல் வெளிப்படுமாறு உரைக்கின்றான். இப்பொழுது பாடல் 20இனைக் கவனிப்போம்.

"வீறு சால் வேந்தன் வினையும் முடிந்தன
ஆறும் பதம் இனிய ஆயின் ஏறொடு
அரு மணி நாகம் அனுங்க, செரு மன்னர்
சேனைபோல் செல்லும், மழை".

வீறு சால் என்பது சிறப்பமைந்த என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "அரசனுடைய போர்த் தொழில்களும் முடிந்தன. வழிகளும் இனியவாயின. மேகங்கள் நாகங்கள் வருந்த, போர்வேந்தரின் சேனைபோல போகும். ஆகவே நாம் போகலாம்"

இந்தப் பாடலில் தலைவன் தனது தோழனிடம் நாங்கள் போகலாம் என்று உரைக்கின்றான். இப்பொழுது பாடல் 21இனைக் கவனிப்போம்.

"பொறி மாண் புனை திண் தேர் போந்த வழியே
சிறு முல்லைப் போது எல்லாம், செவ்வி நறு நுதல்,
செல்வ மழைத் தடங் கண் சில் மொழி, பேதை வாய்
முள் எயிறு ஏய்ப்ப, வடிந்து"

நறுநுதல் என்பது அழகான நெற்றி என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "அலங்கரிக்கப்பட்ட தேர் வந்த வழியில் சிறிய முல்லையின் அரும்புகள் எல்லாம் உன்னுடைய கூர்மையுற்ற நெற்றியையும், கண்களையும், கூரிய பற்களையும் ஒத்து நிற்கும் என்று பார்க்கும் பொருள்களெல்லாம் தலைவியை ஒத்துள்ளது" என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.

இங்கும் தலைவன் தனது தோழனிடம் தான் தலைவி மீதுள்ள காதல் வெளிப்படுமாறு தலைவியைப் புகழ்ந்து கூறுகின்றான். இப்பொழுது பாடல் 22இனைக் கவனிப்போம்.

"இளையரும் ஈரங் கட்டு அயர, உளை அணிந்து,
புல் உண் கலி மாவும் பூட்டிய் நல்லார்
இள நலம் போலக் கவினி, வளம் உடையார்
ஆக்கம்போல் பூத்தன, காடு".

கவினி என்பது அழகுற்று என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "சேவகரும் குளிர் காலத்திற்குரிய உடையினை உடுக்க, குதிரையும் தேருடன் பூட்ட, காடுகள் அழகுற்று வளமானவர்கள் செல்வம் போல பொலிவுற்றது" என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.

இப்பொழுது பாடல் 23இனைக் கவனிப்போம்.

"கண் திறள் முத்தம் கடுப்பப் புறவு எல்லாம்
தண் துளி ஆலி புரள, புயல் கான்று
கொண்டு, எழில் வானமும் கொண்டன்று எவன் கொலோ,
ஒண்டொடி! ஊடும் நிலை?".

> "There is nothing on this earth more to be prized than true friendship."
> –Thomas Aquinas–

ஆலி என்பது ஆலங்கட்டிகளும் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "காடெங்கும் குளிர்ந்த நீர்த்துளிகளும், ஆலங்கட்டிகளும் புரளும் வகை, மழைபொழிந்து அழகினையுடையது. ஆதலால் தலைவர் வருவார். இனிப் புலம்புதல் வேண்டா" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

இந்தப் பாடலில் இயற்கை நிகழ்வுகளை எடுத்துக் கூறி தோழி தலைவியிடம் தலைவன் வருவான் என எடுத்துக் கூறுகின்றாள். இப்பொழுது பாடல் 25இனைக் கவனிப்போம்.

"கருங் கால் வரகின் பொரிப்போல் அரும்பு அவிழ்ந்து,
ஈர்ந் தண் புறவில் தெறுழ் வீ மலர்ந்தன
சேர்ந்தன செய் குறி வாரார் அவர் என்று
கூர்ந்த, பசலை அவட்கு".

கூர்ந்த என்பது கொடிய என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். பருவங் கண்டழிந்த தலைமகனுக்கு தோழி உரைத்தது. இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "குளிர்ச்சிமிக்க காட்டில், அரும்புகள் மலர்ந்தன. செய்த குறிகள் தோன்றின. ஆதலால் தலைவர் இனி வரமாட்டாரென்று தலைவிக்குப் பசலை மிகுதியானது"

இந்தப் பாடலில் தோழி தலைவனுக்கு தலைவியின் நிலையை எடுத்தியம்புகிறாள். இப்பொழுது பாடல் 26இனைக் கவனிப்போம்.

"நலம் மிகு கார்த்திகை, நாட்டவர் இட்ட.
தலை நாள் விளக்கின் தகை உடையவாகி,
புலம் எலாம் பூத்தன தோன்றி - சிலமொழி!-
தூதொடு வந்த, மழை".

புலம் எலாம் என்பது இடமெல்லாம் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "மென்மையாகப் பேசுபவளே! தோன்றிப் பூக்கள், கார்த்திகை திருவிழாவில் கொளுத்தி வைத்த முதல் நாள் விளக்கைப்போல அழகுடையனவாகி மலர்ந்தன" மழையும் தூதுடனே வந்தது. எனவே தலைவன் கார்காலம் கண்டு வருவான்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

இப்பொழுது பாடல் 27இனைக் கவனிப்போம்.

"முருகியம்போல் வானம் முழங்கி இரங்க,. குருகிலை பூத்தன கானம் பிரிவு எண்ணி,
"உள்ளாது அகன்றார்" என்று ஊடி யாம் பாராட்ட,. பள்ளியுள் பாயும், பசப்பு".

பசப்பு என்பது பசலை என்றும் முருகியம்போல என்றால் குறிஞ்சிப் பறை என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "குறிஞ்சிப் பறை போல மேகம் முழங்க, காட்டின்கண் குருக்கத்தியிலை விரிந்தன. பிரிதலை நன்றென்று நினைத்து, நம் வருத்தத்தைக் கருதாது சென்றார் என்று ஊடுதலைப் பாராட்ட நோய் படுக்கையிடத்தில் பரவும்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

இன்று எடுத்துக்கொண்ட எல்லா கார் நாற்பது பாடல்களிலும் பெரும்பாலும் தோழி தலைவன் விரைவில் வந்துவிடுவான் என்று தலைவிக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது. தலைவன் தனது தோழனுடன் உரையாடும் பாடல்களையும் கவனித்தோம். இந்தப் பாடல்கள் அனைத்தும் நட்பின் பெருமைகளுக்குச் சான்றாக அமைந்துள்ளன.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

Vlambaram - December 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-30 5:57 PM Page 11



# கைலாய நாதனையே காணலாமே!

**பெரி – முத்துராமன்**

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## பகுதி 3

மிகுந்த எதிர்பார்ப்புகளுடன், நானும் என் துணைவியாரும் சென்னையிலிருந்து டெல்லி வழியாக, ஒகஸ்ற் 03, 2025அன்று காட்மாண்டுவைச் சென்றடைந்தோம். ஓஜா டிராவல்ஸிலிருந்து, சிரஞ்சீவி எங்களை வரவேற்க விமான நிலையம் வந்திருந்தார். ருத்ராட்ச மாலை ஒன்றை ஒவ்வொருவரின் கழுத்திலும் போட்டு, தங்க இருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார்.

திபெத் செல்ல, குருப் பர்மிட் முன்பே வந்திருந்தாலும், பாஸ்போர்ட்டில் ஸ்டாம்பிங்காக எங்கள் பாஸ்போர்ட்டுகளை வாங்கிக் கொண்டார்.

இனி தேதி வாரியாக, எங்கள் பயணத்தை பார்ப்போமா!

ஒகஸ்ற் 04: காட்மாண்டுவில் சுயம்புநாத் கோவில், ஜல் நாராயணன் கோவில், குயிலேஸ்வரி சக்தி பீடம், பசுபதிநாத் கோயில் போன்றவற்றிற்குச் சென்று தரிசனம் செய்தோம். நேபாளின்



இயற்கைக் காட்சிகள் மனதைக் கவர்ந்தன. பொருளாதார முன்னேற்றம் பெரிதும் இல்லை. ரோடுகள் மிக மோசமாக இருந்தன.

ஒகஸ்ற் 05: கேதார்நாத், சிவனின் உடல் பகுதி என்று சொல்லப்படுகிறது. அவரின் தலை இருப்பது, காட்மாண்டுவில் தோலேஸ்வரர் கோயில் என்றனர். தலையைத் தரிசித்தபின் உடலைத் தரிசிப்பது அவசியம் இல்லை என்றனர். ஆனால் உடலைத் தரிசித்தவர்கள், தலையைத் தரிசித்தால் மட்டுமே கேதார்நாத் யாத்திரை பூர்த்தியாகும்



என்று சொன்னார்கள். அதாவது தோலேஸ்வரர் கோயிலுக்கு வந்தவர்கள், கேதார்நாத் செல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் கேதார்நாத் முதலில் சென்றவர்கள், இந்தக் கோயிலுக்கு அவசியம் வந்து யாத்திரையை நிறைவு செய்ய வேண்டும். இதுதான் ஐதீகம் என்றனர். இன்றைய தினமே, கோரக்நாத் கோவில் மற்றும் ஜல் கணபதி கோயில் சென்றோம். ஆற்றங்கரையின் ஓரத்தில் ஜல் கணபதி கோயில் உள்ளது. கண்ணிற்கினிய பசுமையான காட்சிகள் தென்பட்டன. இமயத்தின் அடியில் இருக்கும் நேபாளத்தில், நீர் வளம் நிரம்பி உள்ளது. எங்கு பார்த்தாலும் ஆறுகள்.

